[30th October 1958

SRIMATHI T. N. ANANDANAYAKI : சரஸ்வதி மஹாலில் இருந்து சில விலை உயர்ந்த மானஸ்கிரிப்ட்டுகளை—சுதந்திரத்துக்கு முன்பே—அந்நிய நாட்டார் வாங்கி விட்டார்கள் என்ற பிரஸ்தாபம் இருந்து வருகிறதே. அது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? அப்படி வாங்கி இருப்பார்கள் என்ற எண்ணம் இருந்தால் அதைத் திரும்பப் பெற முயற்சி எடுத்திருக்கிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்த மாதிரி எந்தவிதமான தகவலும் இல்லை. நம் கையில் இருப்பதைச் சரியானபடி உபயோகத்தாலே நல்ல பயன் ஏற்படும்.

Manufacture of drugs

* 730-B *Q.*—SRI P. G. MANICKAM : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

சென்னை ராஜ்யத்திலே மத்திய அரசாங்கத்தாலும், ராஜ்ய அரசாங்கத்தாலும் எந்தெந்த இடங்களிலே என்னென்ன விதமான மருந்துகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : A statement [a] is placed on the table of the House.

SRI P. G. MANICKAM : நாட்டு வைத்திய முறையில் நாட்டு வைத்தியர்களால் செய்யப்படும் அநேக மருந்துகள் மிகக பயன்கொடுக்கின்றன. அப்படிப்பட்ட மருந்துகளை உற்பத்தி செய்ய அரசாங்கத்தாரால் பரிசலனை நடத்தப்பட்டு வருகிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : நடை முறையில் மருந்து செய்வதற்கு இப்போது எல்லா முயற்சிகளும் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது.

SRI A. A. RASHEED : Is there any proposal to establish a factory for the manufacture of antibiotics in our State?

THE HON. SRI M. A. MANICKAVELU : No definite proposal now, Sir.

Adivasis.

* 730-C *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லா கோடியக்காடு என்னும் கிராமத்திலிருக்கும் ஆதிவாசிகளுக்கு அரசாங்கம் ஏதேனும் உதவி செய்து வருகிறதா ?

(ஆ) அப்படியானால், அதன் விவரங்கள் யாவை ?

(இ) இங்கே ஆதிவாசிகள் குடும்பங்கள் எத்தனை இருக்கின்றன ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes Sir.

(*b*) A sum of Rs. 748–6–0 was spent during 1956–57 for the distribution of clothes to Seenthi Ambalagars who are Adivasis in the Kodaikkadu village.

(*c*) Forty-nine families.

SRI A. VEDARATHNAM : இந்த ஆதிவாசி குழந்தைகளுக்கு காந்தி நினைவு நிதியிலிருந்து ஒரு ஹாஸ்டல் ஏற்படுத்தி அந்தப் பிள்ளைகளுக்கு வசதி செய்து வந்தார்கள். இந்த ஆண்டு உதவியை நிறுத்தி விடப்போவதால் அரசாங்கம் அதை எடுத்துக்கொண்டு அவர்களுக்கு உதவி செய்ய முன்வருமா ?

---

[a] Printed as Appendix VI on pages 185–189 infra